

# 24-07-2024 செய்தி

## அனுசந்தன் தேசிய ஆராய்ச்சி நிதியம்

- பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் ஆர் அண்டு டி ஆய்வகங்கள் ஆகியவற்றின் ஆராய்ச்சிகளை மேம்படுத்த 'அனுசந்தன் தேசிய ஆராய்ச்சி' நிதியம் உருவாக்கப்படும் என்று நேற்று பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது.
- வணிக ரீதியில் தனியார் துறை சார்ந்த ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்க ரூ.1 லட்சம் கோடி நிதி ஒதுக்கப்படும் என்றும் நிர்மலா சீதாராமன் அறிவித்தார்.

## 18 வயதுக்குட்பட்டவர்களுக்கும் தேசிய ஓய்வூதிய திட்டம்

**மத்திய பட்ஜெட்டில் கூறப்பட்டுள்ளதாவது:**

- மைனர்களுக்கு 'தேசிய ஓய்வூதிய திட்டம் வாத்சல்யா' என்ற புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்படும். அதன்படி, 18 வயதுக்குட்பட்ட மைனர்கள் பெயரில் கணக்கு தொடங்கி, அதில் அவர்களது பெற்றோரோ அல்லது பாதுகாவலரோ பணம் செலுத்தலாம்.
- 18 வயது பூர்த்தி ஆன பிறகு, இந்த கணக்கை வழக்கமான தேசிய ஓய்வூதிய திட்ட கணக்காக மாற்றிக் கொள்ளலாம்.
- மேலும், தேசிய ஓய்வூதிய திட்டத்தில், முதலாளியின் பங்களிப்பு தொகை, 10 சதவீதத்தில் இருந்து 14 சதவீதமாக உயர்த்தப்படுகிறது.
- மேலும், தேசிய ஓய்வூதிய திட்டத்தில், முதலாளியின் பங்களிப்பு தொகை, 10 சதவீதத்தில் இருந்து 14 சதவீதமாக உயர்த்தப்படுகிறது.
- அரசு ஊழியர்களுக்கான புதிய ஓய்வூதிய திட்டத்தை ஆய்வு செய்ய நிதித்துறை செயலாளர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.
- அதன் செயல்பாட்டில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. புதிய ஓய்வூதிய திட்டம் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும்.
- பொதுமக்களை பாதுகாக்க நிதி விவகாரத்தில் விவேகமும் கடைபிடிக்கப்படும்.

## முக்கிய அம்சங்கள்

- வேளாண்மை மற்றும் அதுசார்ந்த துறைகளுக்க ரூ.1.52 லட்சம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- இயற்கை வேளாண்மைக்கு அடுத்த இரண்டாண்டுகளில் நாடுமுழுவதும் 1 கோடி விவசாயிகளுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.
- புற்றுநோய் சிகிச்சைக்கான 3 மருந்துகளுக்கு இறக்குமதி வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.
- மொபைல் போன் மற்றும் சார்ஜர்களுக்கான சுங்கவரி 15 சதவீதமாக குறைக்கப்படுகிறது.
- தங்கம் மற்றும் வெள்ளி மீதான அடிப்படை சுங்க வரி 6 சதவீதமாக குறைக்கப்படுகிறது. பிளாட்டினம் மீதான சுங்க வரி 6.4 சதவீதமாக குறைக்கப்படவுள்ளது.
- 25 முக்கிய கனிமங்களுக்கு இறக்குமதி வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.
- தோல் மற்றும் ஜவுளி மூலப்பொருட்களுக்கான சுங்க வரி குறைக்கப்படுகிறது.
- 5 ஆண்டுகளில் 4.1 கோடி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் திறன்மேம்பாட்டு பயிற்சிக்கு பிரதமரின் 5 திட்டங்கள் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.
- ஐந்தாண்டுகளில் 20 லட்சம் இளைஞர்களுக்கு திறன்மேம்பாடு பயிற்சி வழங்கப்படும்.
- 1,000 தொழில்துறை பயிற்சி நிறுவனங்கள் அமைக்கப்படும்.
- தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (இபிஎஃப்ஓ) பதிவு செய்து முதல் முறையாக சேரும் தொழிலாளர்களுக்கு ஒரு மாத சம்பளம் (ரூ.15,000 வரை) 3 தவணைகளில் வழங்கப்படும்.
- நாட்டின் பல்வேறு பகுதிகளில் மகளிர் விடுதிகள், குழந்தை காப்பகங்கள் அமைக்கப்படும்.
- பிரதமரின் வீட்டு வசதி திட்டத்தின் கீழ், அடுத்த 5 ஆண்டுகளில் நகர்ப்புறங்களில் வீடுகள் கட்டுவதற்கு, மத்திய நிதி ரூ2.2 லட்சம் கோடி உட்பட ரூ.10 லட்சம் கோடி முதலீடு செய்யப்படும்.

SURESH

- பிரதமரின் சூரிய மின்சக்தி திட்டத்தின் கீழ் ஒருகோடி வீடுகளுக்கு மாதம் 300 யூனிட் இலவச மின்சாரம் கிடைக்கும்.
- சோலார் செல் மற்றும் பேனர் தயாரிப்புகளுக்கான மூலப் பொருட்களுக்கு சுங்க வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- 12 தொழில்துறை பூங்காக்கள் விரைவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- 5ஆண்டுகளில் ஒருகோடி இளைஞர்களுக்கு, 500 முன்னணி நிறுவனங்களில் தொழில் பழகுநர் வாய்ப்புகள் வழங்கும் வகையிலான விரிவான திட்டத்தை மத்திய அரசு தொடங்கவுள்ளது. அவர்களின் ஓராண்டு பயிற்சியில் மாதம் ரூ.5000 உதவித் தொகை வழங்கப்படும்.
- அதோடு ஒரு முறை நிதியுதவியாக ரூ.6,000 வழங்கப்படும். பயிற்சிக்கான செலவு மற்றும் 10 சதவீத உதவித் தொகையை தொழில் நிறுவனங்கள் தங்கள் சிஎஸ்ஆர் நிதியில் இருந்து அளிக்க வேண்டும்.
- தொழிற்சாலை ஊழியர்களுக்கு வாடகைக்கு வீடு வழங்கும் திட்டம் அரசு, தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும்.
- முத்ரா கடனுதவி திட்டத்தின் உச்சவரம்பு ரூ. 10 லட்சத்திலிருந்து ரூ.20 லட்சமாக அதிகரிக்கப்படும்.
- 100 உணவு தரநிலை மற்றும் பாதுகாப்பு பரிசோதனை ஆய்வகங்கள் அமைக்கப் படும்.
- குறு, சிறு நடுத்தர நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில், மின்னணுவர்த்தக ஏற்றுமதி மையங்கள் ஏற்படுத்தப்படும். வேலைவாய்ப்புடன் இணைந்த ஊக்குவிப்பு திட்டத்தின் மூலம் 30 லட்சம் இளைஞர்கள் பயன் பெறுவார்கள்.
- திவால் நடைமுறைகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண கூடுதல் தீர்ப்பாயங்கள் அமைக்கப்படும்.
- வீட்டுவசதி திட்டத்தில் 1 கோடி நகர்ப்புற ஏழை மக்கள் பயனடைவர்.
- பத்திரப்பதிவு கட்டணத்தை திருத்தியமைக்க மாநிலங்கள் வற்புறுத்தப்படும்.
- உலக அளவில் இந்தியாவை சுற்றுலா மையமாக உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் மேம்படுத்தப்படும். கயா மற்றும் புத்தகயாவில் உள்ள கோயில்கள் மேம்படுத்தப்படும்.
- ஒடிசாவில் நினைவுச் சின்னங்கள் மற்றும் கோயில்கள் புனரமைப்பு பணிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.
- நாளந்தா பல்கலைக் கழகம் இருந்த இடம் சுற்றுலா மையமாக மேம்படுத்தப்படும்.
- விண்வெளி ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புகளில் தனியார் பங்களிப்பு ஊக்குவிக்கப்படுகிறது. ரூ.1000 கோடி ரூபாய் மூலதன நிதியில் விண்வெளி பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- இதன் மூலம் அடுத்த 10 ஆண்டுகளில் விண்வெளி பொருளாதாரம் 5 மடங்காக அதிகரிக்கும்.
- ஆந்திராவில் புதியதலைநகர் அமராவதியை கட்டமைக்க சிறப்பு நிதியாக ரூ.15,000 கோடி ஒதுக்கப்படும்.
- பிகாரில் நெடுஞ்சாலைகளை மேம்படுத்த ரூ.26,000 கோடி ஒதுக்கப்படும். வெள்ள நிவாரணப் பணிகளுக்காக 11,500 கோடி ரூபாய் நிதியுதவி அளிக்கப்படும்.
- அசாம், இமாச்சலப் பிரதேசம், உத்தரகண்ட் மற்றும் சிக்கிம் ஆகிய மாநிலங்களில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவை போன்றவற்றை தடுக்கும் திட்டங்களுக்கு மத்திய அரசு நிதியுதவி அளிக்கவுள்ளது.
- கடன்கள் தவிர மொத்த வருவாய் ரூ.32.07 லட்சம் கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. மொத்த செலவினத் தொகை ரூ.48.21 லட்சம் கோடி
- நிகர வரிவருவாய் ரூ.25.83 லட்சம் கோடி நிதிப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.9 சதவீதம் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

## முத்ரா கடன் ரூ.20 லட்சமாக அதிகரிப்பு

- சிறு, குறு தொழில்களுக்கு பிணை இல்லாமல் கடன் உதவி வழங்குவதற்காக மத்திய அரசு, 2015-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முத்ரா யோஜனா திட்டத்தைக் கொண்டுவந்தது.
- முத்ரா யோஜனா திட்டத்தின் கீழ் மூன்று பிரிவுகளில் கடன் வழங்கப்படுகிறது. சிஷு பிரிவின் கீழ் ரூ.50,000 வரையிலும் கிஷோர் பிரிவின் கீழ் ரூ.5 லட்சம் வரையிலும், தருண் பிரிவின் கீழ் ரூ.10 லட்சம் வரையிலும் கடனாக வழங்கப்படுகிறது.
- வங்கிகள், வங்கிசாரா நிதி நிறுவனங்கள், சிறு நிதி நிறுவனங்கள் இந்த திட்டத்தின் கீழ் கடன்களை வழங்கி வருகின்றன.
- இத்திட்டத்தின் கீழ், சிறு. குறு, நடுத்தர தொழிலில் ஈடுபடுபவர்கள் எந்தவித அடமானமும் இல்லாமல் கடன் பெற முடியும்.
- இதுவரையில் முத்ரா திட்டத்துக்கான கடன் வரம்பு தருண் பிரிவின் கீழ் ரூ.10 லட்சமாக இருந்தது.
- இந்நிலையில், தற்போது ரூ.20 லட்சமாக உயர்த் தப்படுவதாக அறிவிக்கப்பட்டு உள்ளது.
- ஏற்கெனவே முத்ரா திட்டத்தின் கீழ் கடன் வாங்கி அதை முறையாக திருப்பி செலுத்தியவர்களுக்கு இந்த அறிவிப்பு பொருந்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.